# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE, No. 6,132, JULY 20, 1906.


# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## PRELIMINARY NOTICE, WASTE LAND SETTLEMENT.

[Uva S. O. 25—1906.]

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவற்றிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1906 ம் ஜுலை (ஆடிமீ) 20 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். ஓ. பொக்ஸ்துரை அவர்களிடம் கொழும்பு முகத்துவாரம் "ஹில் ஹவுஸ்" என்னும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். ஓ. பொக்ஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

### சுட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம் வெல்லாசைப்பகுதி மெதகம்பத்து கோறளையைச்சேர்ந்த விவிலெமுல்ல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

பிரதம படம் 138.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | பே. |
|---|---|---|---|---|
| 1 | எலஉன்யாயலலஉனே | 58 | 3 | 5 |
| 2 | மடுவெல்கெற்றியேயன்யாய | 44 | 1 | 13 |
| 4 | கித்துல்காலந்த, கோமகொடயாய | 102 | 3 | 28 |
| 16 | கொஸ்வத்தேபிற்றியேதெனிய | 1 | 1 | 0 |
| 18 | கலந்தேமயினை அல்லது கலந்தேலந்த கணத்தை பண்டலமுல்லை | 30 | 1 | 11 |
| 47 | மாறகாதோவேவெற்றிய | 0 | 2 | 13 |
| 55 | ஒந்தகலஅகலான | 39 | 0 | 39 |
| | | 277 | 1 | 29 |

எல்லைகளாவன: வடக்கு-சேனபத்திய கிராம எல்லை, புண்டலுமுவலைக் கிராம எல்லை; கிழக்கு-ஒரு சிற்றாறு, (வடலகம்மனைக் கிராம எல்லை), வடலகம்மனைக் கிராம எல்லை, தலோஓக்கலைக் கிராம எல்லை, நாகங்கொடைக் கிராம எல்லை; தெற்கு-கருனைம்மைக்கந்துற என்னும் அருவி, (துகமுரேக் கிராம எல்லை), கோகும்புறைக் கிராம எல்லை; மேற்கு-பட்டிக்கிந்தைப் பகுதி எல்லை.

கவனிப்பு.—மேற்சொல்லிய எல்லைகளுக்குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலினின்றும் நீக்கப்பட்டிருக்கின்றன வென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 98 ஏக்கர் 3 றூட்டு 1 பேட்சும் முன்சொன்ன 277 ஏக்கர் 1 றூட்டு 29 பேட்சுக்குள் அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

பிரதம படம் 138.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | பே. |
|---|---|---|---|---|
| 3 | வறக்ககாதென்னேவத்தை | 3 | 2 | 24 |
| 5 | எலவத்தை | 3 | 1 | 1 |
| 6 | வித்தகும்புறவத்தை | 1 | 3 | 1 |
| 7 | மெதகெதறவத்தை | 2 | 3 | 28 |
| 8 | பாலவத்தை | 1 | 3 | 32 |
| 9 | ஊவாகெதறவத்தை | 1 | 3 | 6 |
| 10 | எகொடகெதறவத்தை | 0 | 3 | 33 |
| 11 | கொடிஒழுனேவத்தை | 0 | 2 | 26 |
| 12 | ஏ. கெதறவத்தை | 0 | 3 | 17 |
| 13 | வந்தேகெதறவத்தை | 3 | 1 | 24 |
| 14 | கௌதெல்லெகெதறவத்தை | 4 | 2 | 31 |
| 15 | புஸ்ஸந்தகாஅருவ | 1 | 1 | 13 |
| 17 | வட்டுகெம்மனஅருவ | 0 | 2 | 34 |
| 19 | மடுகாஅருவ | 0 | 3 | 14 |
| 20 | கல்கெற்றியவத்தை | 0 | 3 | 14 |
| 21 | இறம்புக்காகும்புறேவத்தை | 2 | 0 | 24 |
| 22 | நைந்துஅருவ | 1 | 0 | 26 |
| 23 | அஞத்கெதறவத்தை | 1 | 3 | 20 |
| 24 | பாஞ்சலபொக்குண | 0 | 1 | 16 |
| 25 | விகாரவத்தை (உ. ப. 67,313 ம் கட்டிய நிலம்) | 0 | 0 | 12 |
| 26 | கொடிகமுவேஅருவ | 3 | 3 | 8 |
| 27 | தட்டபல்வஅருவ | 1 | 0 | 4 |
| | | 1 | 1 | 4 |

* இங்கிலீஷின் IV. ம் பாகம் 673 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

| காணித்துண்டு. | | காணியினது பெயர். | | | | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|---|---|
| 28 | ... | நுக்காயிற | ... | ... | ... | 1 0 35 |
| 29 | ... | மெதயிற | ... | | ... | 1 0 19 |
| 30 | ... | கொடயிற | ... | ... | ... | 1 2 9 |
| 31 | ... | குடாயிற | ... | ... | ... | 1 2 18 |
| 32 | ... | நில்வத்தை | ... | ... | ... | 0 2 38 |
| 33 | ... | குடாவத்தை | ... | ... | ... | 0 0 33 |
| 34 | ... | லேக்கம்வத்தை, கொஸ்வத்தை, மெதகங்கொடைவத்தை | | | | 8 0 3 |
| 35 | ... | மோறகாஅருவ | ... | ... | ... | 0 2 19 |
| 36 | ... | மாயிற | ... | ... | ... | 1 1 14 |
| 37 | ... | ஈன்அருவ | ... | ... | ... | 0 2 4 |
| 38 | ... | அளுவெத்தஅருவ | ... | ... | ... | 2 2 33 |
| 39 | ... | பஸறயாகேஅருவ அல்லது கொடகனுவேஅருவ | | | ... | 1 3 31 |
| 40 | ... | புபுலேவெல | ... | ... | ... | 7 1 22 |
| 41 | ... | குடாயிற | ... | ... | ... | 1 0 4 |
| 42 | ... | கல்மடுவேகும்புற | ... | | ... | 2 1 23 |
| 43 | ... | பள்ளேவட்டேஎளே (உ. ப. 53,418 ம் துண்டு) | | | ... | 0 0 20 |
| 44 | ... | கொடகும்புறேபிற்றிய (உ. ப. 53,418 ம் துண்டு) | | | ... | 4 0 5 |
| 44a | ... | கொடேகும்புறேபிற்றியேஎளே (உ. ப. 53,418 ம் துண்டு) ... | | | | 0 3 33 |
| 45 | ... | வெத்தேபொடயிற | ... | ... | ... | 1 3 2 |
| 46 | ... | மெதகும்புற | ... | ... | ... | 1 1 1 |
| 48 | ... | வளகும்புற | ... | ... | ... | 1 3 22 |
| 49 | ... | மாறகாதாவ | ... | .. | ... | 1 3 2 |
| 50 | ... | குளந்தகாயிற | ... | ... | ... | 1 3 7 |
| 51 | ... | வெற்றகேஅத்தயிற | ... | ... | ... | 1 3 34 |
| 52 | ... | துன்இற, ஙியம்பலாநாயிற | | ... | ... | 7 1 0 |
| 53 | ... | கொஸ்காகும்புற | ... | ... | ... | 2 3 10 |
| 54 | ... | பாலவெலவத்தை | ... | ... | ... | 0 1 9 |
| | | | | | | 98 3 1 |

2,506

---

[Tender for Arrack Rent, Central Province, 1907.]

உத்தம தேசாதிபதியாரால் நியமிக்கப்பட்ட போட் சமாஜம் ஒன்று,—பின்னால் சொல்லப்படும் அரக்குச் சாராயக் குத்தகையைக் குறிக்கப்பட்ட கால எல்லைக்கு விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைத் திறந்து கவனித்துப்பார்க்கும் நோக்கமாக, கவுன்சில் சங்கமண்டபத்திலே ௧௯௦௬ ம் ஷு ஆகஸ்ற் (ஆவணி)மீ ௪௦ ந் தேதியிலே கூடும் என்று இதனால் அறிவிக்கப்படுகின்றன.

மத்திய மாகாணம் —௧௯௦௭ ம் ஷு ஜனவரி (தை)மீ ௧ ந் தேதி முதலாக ஒரு வருஷ அல்லது இரண்டு வருஷ காலத்துக்கு.

குறித்த நாள் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குப் பிறகு யாதொரு கேள்விப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒவ்வொரு கேள்விக்காரனும் தான் கொடுக்க ஆயத்தமாயிருப்பது இன்ன விலை எனப் பத்திரத்திலே காட்டி எழுதவேண்டும்.

கேள்விப்பத்திரங்களைச் சரியாய்ச் சீல் முத்திரை வைத்தொட்டி, அக்டிங் கலோனியல் சக்கிரெத்தார் எச். எல். கிருவோட் சீ.எம்.ஜீ., என்னு மேல்விலாசமிட்டு, "அரக்குச் சாராயக் குத்தகை ஒப்பந்தக் கேள்வி" என்று எழுதப்பட்டு கேள்விக்காரன் தானே போட் சமாஜத்துக்கு நேரே கொடுக்கவேண்டும்.

விற்பனவுக் கொந்திராக் மாதிரிக் கடுதாசிகளும் தவறணைக்கடைகளின் இடாப்பும் இலங்கையில் எந்தக் கச்சேரியிலும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரம் அறியவேண்டுமானால், வடமேற்கு மாகாணத்து கவண்மேந்து ஏஜண்டருக்குக் காகிதம் எழுதியாவது நேரே அவரைக்கண்டு கேட்டாவது பெற்றுக்கொள்ளலாம்.

இங்கிலீஸ் பேச அறியாத கேள்விக்காரர்கள், போட் சமாஜத்தாரோடு சம்பாஷிக்க விரும்புகிறவர்கள், தங்கள் தங்கள் துவிபாஷிகரை இட்டுக்கொண்டு வரக்கடவர்கள்.

கவுன்சில் சங்கமண்டபத்துக்குக் கேள்விக்காரன் தானேயாவது அவனது அதிகாரம்பெற்ற ஏஜன்றுத் தத்துவகாரனாவது வந்திருந்து, தான் கேட்ட வீதம் ஒரு மாசக் குத்தகைத் தொகைப்பணம் உடன்கையில் கட்டுவதற்கு ஆயத்தமுமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமுங் கவனிக்கப்படமாட்டாது.

இரண்டு கேள்விப்பத்திரங்கள் அல்லது அதற்கு மேலானவைகள் ஒரு சமத்தொகை கேள்வியாயிருக்கும் பக்ஷத்தில், இரண்டிலொன்று செய்வதற்கு போட் சமாஜத்துக்கு இட்டம் உண்டு; அதாவது, அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மட்டுமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் குத்தகையை உடன்கையில் போடலாம்; அல்லது புதுக் கேள்விப்பத்திரங்களைக் கேட்கலாம். ஆகக் குறைந்த ஒப்பந்தக் கேள்வியையாவது எந்தக்கேள்வியையாவது ஏற்றுக்கொள்ள போட் சமாஜத்தார் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளவில்லை.

குத்தகை வாங்கினவர் ஒரு கலனுக்கு நாலரை ரூபாவுக்குக் குறையாத எந்த விலைக்கும் அரக்குச் சாராயம் விற்றற்கு இடங் கொடுக்கப்படுவார்கள்.

கொழும்புக் கவண்மேந்து ஏஜண்டரிடம் எழுத்து மூலமாக ஆவது, நேரே கண்டு கேட்டாவது, கேள்விப்பத்திர மாதிரிக் கடுதாசிகள் சும்மா விலையில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தமதேசாதிபதியார் கட்டளைப்படி,

எச். எல். கிருவோட்,
அக்டிங் இராசாங்க விகிதர்.

கொழும்பு, இராசாங்க விகிதர் கந்தோர்,
1906 ம் ஷு ஜூலை(ஆடி)மீ 11 ந் உ.

[Tender for Arrack Rent, Chilaw District, North-Western Province, 1907.]

உத்தம தேசாதிபதியாரால் நியமிக்கப்பட்ட போட் சமாஜம் ஒன்று,—பின்னால் சொல்லப்படும் அரக்குச் சாராயக் குத்தகையைக் குறிக்கப்பட்ட கால எல்லைக்கு விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களைத் திறந்து கவனித்துப்பார்க்கும் நோக்கமாக, கவுன்சில் சங்கமண்டபத்திலே ௧௯௦௬ ம் ஆண்டு ஜூலை (ஆடி) மீ ௨௧ ந் தேதியிலே கூடும் என்று இதனால் அறிவிக்கப்படுகின்றன.

வடமேற்கு மாகாணம் சிலாப டிஸ்திரிக்—௧௯௦௭ ம் ஆண்டு ஜனவரி (தை) மீ ௧ ந் தேதி முதலாக ஒரு வருஷ அல்லது இரண்டு வருஷ காலத்துக்கு.

குறித்த நாள் மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குப் பிறகு யாதொரு கேள்விப்பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒவ்வொரு கேள்விக்காரனும் தான் கொடுக்க ஆயத்தமாயிருப்பது இன்ன விலை எனப் பத்திரத்திலே காட்டி எழுத வேண்டும்.

கேள்விப்பத்திரங்களைச் சரியாய்ச் சீல் முத்திரை வைத்தொட்டி, அக்டிங் கலோனியல் சக்கிடேத்தார் எச். எல். கிறுவோட் சி.எம்.ஜி., என்று மேல்விலாசமிட்டு, "அரக்குச் சாராயக் குத்தகை ஒப்பந்தக் கேள்வி" என்று எழுதப்பட்டு கேள்விக்காரன் தானே போட் சமாஜத்துக்கு நேரே கொடுக்கவேண்டும்.

விற்பனவுக் கொந்திசு மாதிரிக் கடுதாசிகளும் தவறணைக்கடைகளின் இடாப்பும் இலங்கையில் எந்தக் கச்சேரியிலுங் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரம் அறியவேண்டுமானால், வடமேற்கு மாகாணத்து கவண்மேந்து ஏஜண்டருக்குக் காகிதம் எழுதியாவது நேரே அவரைக்கண்டு கேட்டாவது பெற்றுக்கொள்ளலாம்.

இங்கிலீஸ் பேச அறியாத கேள்விக்காரர்கள், போட் சமாஜத்தாரோடு சம்பாஷிக்க விரும்புகிறவர்கள், தங்கள் தங்கள் துவிபாஷிகளை கூட்டிக்கொண்டு வரக்கடவர்கள்.

கவுன்சில் சங்கமண்டபத்துக்குக் கேள்விக்காரன் தானேயாவது அவனது அதிகாரம்பெற்ற ஏஜன்றாத் கத்துவகாரனாவது வந்திருந்து, தான் கேட்ட வீதம் ஒரு மாசக் குத்தகைத் தொகைப்பணம் உடன்கையில் கட்டுவதற்கு ஆயத்தமுமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமுங் கவனிக்கப்பட மாட்டாது.

இரண்டு கேள்விப்பத்திரங்கள் அல்லது அதற்கு மேலானவைகள் ஒரு சமத்தொகை கேள்வியாயிருக்கும் பக்ஷத்தில், இரண்டிலொன்று செய்வதற்கு போட் சமாஜத்துக்கு இட்டம் உண்டு; அதாவது, அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மட்டுமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் குத்தகையை உடன்கையில் போடலாம்; அல்லது புதுக் கேள்விப்பத்திரங்களைக் கேட்கலாம். ஆகக் குறைந்த ஒப்பந்தக் கேள்வியையாவது எந்தக் கேள்வியையாவது ஏற்றுக்கொள்ள போட்சமாஜத்தார் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளவில்லை.

குத்தகை வாங்கினவர் ஒரு கலனுக்கு நாலரை ரூபாவுக்குக் குறையாத எந்த விலைக்கும் அரக்குச் சாராயம் விற்றற்கு இடங் கொடுக்கப்படுவோர்கள்.

கொழும்புக் கவண்மேந்து ஏஜண்டரிடம் எழுத்து மூலமாக ஆவது, நேரே கண்டு கேட்டாவது, கேள்விப்பத்திர மாதிரிக் கடுதாசிகள் சும்மா விலையில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

உத்தமதேசாதிபதியார் கட்டளைப்படி,

எச். எல். கிறுவோட்,
அக்டிங் இராசாங்க லிகிதர்.

கொழும்பு, இராசாங்க லிகிதர் கந்தோர்,
1906 ம் ஆண்டு ஜூலை (ஆடி) மீ 2 ந் உ.

---

[Tender for repairing Salt Stores in Northern Depot, Puttalam.]

"புத்தளம் வடபுரத்து டிப்போவிலிருக்கும் உப்புக்குதத்தைப் பழுதுபார்க்க" வென்று மேல்உரையில எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றாத்துரையவர்களால் 1906 ம் ஆண்டு ஆவணி மாதம் 2 ந் தேதி பிற்பகல் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

கூரை வேயவும், சுற்றிவரயிருக்கும் புது கிடுகுகளினால் பழுதுபார்த்து ஏருசாமட்டை கட்டவும், தரையை கிரவல் போட்டு நன்றாய் அடித்து மட்டப்படுத்தவும் வேண்டியது.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

(a) கேள்விக்காரர் 1906 ம் ஆண்டு ஆவணி மாதம் 2 ந் தேதிக்கு முன்பதாக புத்தளம் கச்சேரியில் ரூபா 10 கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும், அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏஜன்றாத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொந்திசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் கேள்விக்காரர் தங்களுடைய பேரையும் தாங்களிருக்கும் இடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விசாரியறிந்துகொள்ளலாம்.

எச். டபிளியு. கொட்ரிங்டன்,
உதவி ஏசன்றாத்துரை.

புத்தளம் கச்சேரி,
1906 ம் ஆண்டு ஆடி மீ 2 ந் உ.

---

[Tender for repairing five patrols huts of the Eastern Salterns, Puttalam.]

"புத்தளம் கீழ்கரை 5 காவற்கொட்டுகளைப் பழுதுபார்க்க" வென்று மேல உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றாத்துரை அவர்களால் 1906 ம் ஆண்டு ஆவணிமாதம் 2 ந் தேதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

கீழ்கரை 5 காவற்கொட்டுகளை பழுதுபார்க்கும் விபரமாவது :—

செரித்த எல்லா மரங்களை எடுத்துப்போட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய புதியவைகள் பாவிக்கவேண்டும்

தரையை செப்பனிடவும் வேலிகளைத் திரும்பக்கட்டவும் வேண்டியது. வாசல்களுக்கு கம்புபோடவேண்டியது.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது: —

(a) கேள்விக்காரர் 1906 ம் ஆண்டு ஆவணிமாதம் 2 ந் தேதிக்கு முன்பதாக புத்தளம் கச்சேரியில் ரூபா 10 கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபார்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும், அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றாத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொந்திசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் கேள்விக்காரர் தங்களுடைய பேரையும் தாங்களிருக்கும் இடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்க வேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விசாரியறிந்துகொள்ளலாம்.

எச். டபிளியு. கொட்ரிங்டன்,
உதவி ஏசன்றாத்துரை.

புத்தளம் கச்சேரி,
1906 ம் ஆ. ஆவணி மீ 2 ந் உ.

[Tender for repairing Salt Department Officer's Quarters.]

புத்தளம் "உப்பு டிப்பாற்மெந்துக்குச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களுடைய வீடுகளைப் பழுதுபார்க்க" வென்று மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களால் 1906 ம் ஆண்டு ஆவணிமாசம் 2 ந் தேதி வியாழக்கிழமை 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

இரண்டாவதின் வீட்டையும் கங்காணியுடையவும் காவற்காரருடையவும் வீடுகளை பழுதுபார்க்கிறதும் வேய்கிறதும்.

பழுதுபார்ப்பனவாவது :—

விபரம்.

வளமையாய் வெள்ளையடித்திருக்கும் கட்டிடங்களின் சுவர்களை வெள்ளையடிக்கவும்.

வளமையாய் மைபூசியிருக்கும் கதவுகளை மைபூசவும்.

கட்டிடங்களின் தரைகளை செப்பனிடவும்.

வேலிகளை திரும்ப அடைக்கவும்.

முதலாம் கொஸ்தாப்பல் வீட்டின் குசினி வாசலுக்கு ஒரு நிலையும் கதவும் போடவும்.

பாதை சோதினைக்காரரின் வீட்டுக்கு கதவும் நிலையும் போடவும்.

காவற்காரன் உஸ்மானுடைய கொட்டுக்கு ஒரு சன்னல் வைக்கவும் வேண்டியது.

1. கேள்விக்காரன் 1606 ம் ஆண்டு ஆவணிமாசம் 2 ந் தேதிக்குள்ளாக கச்சேரியில் ரூபாய் 5 கட்டவேண்டும். உதவி ஏசன்றுத்துரை அவர்களால் நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்கப் பறிமுதலாக்கப்படும்.

2. கொந்திறாத்து அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தன்னுடைய பெயரையும் தானிருக்கும் இடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

3. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும், அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை யவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிக விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் வினவி யறிந்துகொள்ளலாம்.

எச். டபிளியு. கொட்ரிங்டன்,
உதவி ஏசன்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1906 ம் ஆ ஆடிமீ 13 ந் வ.

[Supreme Court Criminal Sessions, Kandy.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் குருனாகல் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்குவிசாரணை, 1906 ம் ஆண்டு ஆவணிமாதம் 1 ந் தேதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியசம்பந்தமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
சி. வீ. சிபேரு,
பிஸ்காலுக்காக.

குருனாகல் பிஸ்கால் கந்தோர்,
1906 ம் ஸ்ரீ ஆடிமீ 13 ந் வ.

[Notice prohibiting bathing or washing within certain limits in the Colombo Lake.]

1890 ஆண்டின் 26 ம் இலக்கச்சட்டத்தின் 14 ம் பிரிவின் கீழுள்ள 2 ம் உபபிரிவின்படி, "ஐங்வேர்சன்" வீதியிலிருந்து "பார்க் ஸ்றீட்" சந்திக்கும், உனுப்பிட்டி லேக் றேட்டுக்கு மிடையிலுள்ள லேக் றேட் என்னும் வீதியிலிருக்கும் வாவியில் புடவைகள் கழுவவும், அல்லது மிருகங்களைக் "குளிப்பாட்டவும்" அல்லது உடம்பு கழுவவும் அல்லது குளிக்கும் இச்செய்கைகள் தடைசெய்ய பட்டிருக்கின்றன வென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்த அறிவித்தலுக்கு விரோதமாக குளிக்கும் அல்லது உடம்பு கழுவும் அல்லது வேறு விரோதமான செய்கைகளைச்செய்யும் எவனும் குற்றவாளியாகக் கவனிக்கப்பட்டு 3 ம் உபபிரிவின்படி 50 ரூபாய்க்கு மேற்படாத அபராத மிறுக்கப்பாத்திரவானுவான்.

பி. ஓர்ஸ்போர்க்,
மேஜரும் சபாநாயகரின்
நகரசங்கக் கந்தோர், வேலைபார்ப்பவரும்.
கொழும்பு, 1906 ம் ஸ்ரீ ஆனிமீ 20 வ.

[Election of a Municipal Councillor for Ward No. 4, Kandy.]

4ம் பகுதியின் ஆலோசனைகாரராகிய பி. டி. அப்பு ஹலவ்வை அவர்கள் மரணித்தும்போனபடியினால் வீதியுள்ள தவணைக்கு அப்பகுதிக்கு ஒரு ஆலோசனைக்காரரை தெரிந்தெடுக்கும்படி 1887 ம் வருஷத்தின் 7 ம் கட்டளைச்சட்டத்தின் 37 ம் பிரிவின் பிரகாரம் 1906 ம் வருஷம் ஆவணிமீ 7 ந் தேதி செவ்வாய்க்கிழமை முன்னேரம் 8.30 மணிக்கு கண்டி நகரசங்கச்சாலையில் அப்பகுதியில் சம்மதங்கொடுக்க தகுதியுள்ளவர்களுடைய ஒரு கூட்டம் வைக்கப்படுமென்று இதனால் அறிவிக்கப்படுகின்

(ஒப்பமிடுதது) ஏ. பி. லுவிஸ்,
கண்டி நகரசங்கத்தலைவர்

கண்டி நகரசங்கத்து கந்தோரில்,
1906 ம் ஸ்ரீ ஆடிமீ 9 ந் வ.

[UNOFFICIAL ANNOUNCEMENT.]

[R. H. D. C. E. Gunasekara.]

கொழும்பு ஹுலப்பான பிரிவிலுள்ள பழைய மொறு கொடைவத்தை வீதி 90 ம் இலக்க வீட்டில வசிக்கும ரணசிங்கச்செட்டி ஆறச்சிகே டொன் கொண்ஸ்ரர்ட் எட்வர்ட் குணசேகற ஆகிய நான் 1877 ம் ஆண்டு 2 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ம பிரிவின் பிரகாரம் இது முதல் மூன்று மாசத்தின்பின் கொழும்பு டிஸ்றிக்கில சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக வேலைபார்ப்பதற்கு நியமனஞ்செய்து உத்தரவுகொடுக்கும்படி அதிமேன்மை தங்கிய தேசாதிபதியவர்களை வேண்டிக்கொள்ளுகின்றே னென்பதை இத்தால் அறியக்கொடுக்கின்றேன.

ர. ஹெ. டொ. கொ. எ. குணசேகற.
1906 ம் ஆண்டு ஆடிமீ 15 ந் வ.

H. M. RICHARDS, ASSISTANT GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.